IN THE COURT OF THE PRINCIPAL DISTRICT MUNSIF, VELLORE
VELLORE DISTRICT
**O.S.No.97/2024**

Deposition of Witness of: PW1
1. Name : **அருள்மொழி சிவனேசன்**
2. Husband's name: **சிவனேசன்**
3.Village :
4.Taluk :
5.Calling :
6.Religion :
7.Age :
Solemnly affirmed in accordance with be provision of Act of 1873 on this day of 01.06.2026

**குறுக்கு விசாரணை**

1. தாவா சொத்து வீடு என்றால் சரிதான். தாவா சொத்தில் நான் குடியிருந்து வருகிறேன் என்றால் சரிதான். தாவா சொத்தை முதலில் என் கணவர் காலிமனையாக தான் கிரையம் பெற்றார் என்றால் சரிதான். என் கணவர் தாவா சொத்தை கிரையம் பெறும் போது தாவா சொத்திற்கு தெரு இல்லை என்றும் மேலும் மனை எண் இல்லை என்றால் மனை எண் உள்ளது. ராஜீவ் காந்தி நகர், 7வது கிராஸ் தெரு என்ற தெரு பெயர் உள்ளது. மேற்படி விவரம் வா.சா.ஆ 1ல் உள்ளதா என்றால் இல்லை. ஆனால் சர்வே எண் மற்றும் ஜக்பந்திகள் உள்ளது. **(சாட்சிக்கு வா.சா.ஆ.1 காண்பிக்கப்பட்டது)** வா.சா.ஆ5 என் கணவர் எனக்கு எழுதிய தான செட்டில்மெண்ட் பத்திரம் என்றால் சரிதான். வா.சா.ஆ1ல் மனை எண் மற்றும் தெரு பெயர் இல்லாததால் என் கணவர் வா.சா.ஆ5 மூலம் தெரு மற்றும் மனை எண்ணை குறிப்பிட்டு என் பெயருக்கு எழுதி வைத்தார் என்றால் இல்லை.

2. என் கணவருக்கு உடல் நிலை சரியில்லாத காரணத்தினால் வா.சா.ஆ5ஐ என கணவர் எனக்கு எழுதி வைத்தார். 7வது தெரு வடக்கு தெற்காக உள்ளது என்றால் சரிதான். தெருவிற்கு கிழக்கு புறமாய் என் வீடு

உள்ளது என்றும் வாசற்படி மேற்கு நோக்கி உள்ளது என்றால் சரிதான். என் வீட்டிற்கு வடக்கு புறமாக 3அடி காலி இடங்கள் உள்ளது என்றால் 2 அடி காலியாக உள்ளது. 3அடி காலி இடம் தான் உள்ளது என்றும் நான் வழக்கிற்காக தவறான சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. தாவா சொத்தின் அடிமனையின் அகலம் வடக்கு தெற்கு 30 அடி என்றால் சரிதான். தாவா சொத்தின் கட்டிடத்தின் அகலம் வடக்கு தெற்கு 27 அடி என்றால் சரிதான். தாவா சொத்திற்கு தெற்கு புறம் ஒட்டியவாறு உள்ள காலி மனை பிரதிவாதிக்கு சொந்தமானது என்றால் சரிதான். என் வீட்டின் தெற்கு புறம் சுவர் தெருவில் இருந்து ஆரம்பமாகிறது என்றால் இல்லை வராண்டா உள்ளது. வராண்டாவிற்கு தெற்கு புறமாக சுவர் உள்ளது என்றும் அது என் வீட்டை ஒட்டியவாறு உள்ளது என்றால் சரிதான். மனையின் உடைய தெற்கு புற எல்லை கோட்டின் மேல் எங்கள் வீட்டின் தெற்கு புற சுவர் அமைந்துள்ளது என்றால் சரியல்ல. எங்கள் தெற்கு புற சுவரிற்கு பக்கத்தில் 1 அடி அகலம் காலி மனை உள்ளது.

3. எங்கள் வீட்டின் தெற்கு புறம் வெளி புறத்தில் Ac ன் out door unit ஐ வெளி புறமாக பொருத்தி உள்ளேன் என்றால் சரிதான். தெற்கு புறம் sun shade வைத்துள்ளேன் என்றால் சரிதான். தரையில் இருந்து சுமார் 5 அல்லது 6 அடி உயரத்தில் out door unit ஐ பொருத்தி உள்ளேன் என்றால் சரிதான். நான் என் எல்லை வரைக்கும் வீட்டை கட்டியுள்ளேன் என்றும் நான் பொருத்தியுள்ள out door unit ஐ பிரதிவாதியின் மனையில் பொருத்தியுள்ளேன் என்றால் சரியல்ல. என் நிலத்தில் தான் நான் out door unit ஐ வைத்துள்ளேன். வடக்கு எல்லையில் இருந்து வீட்டை அளந்தால் 30 அடி தெற்கு புற சுவர் வரை வருகிறது என்றும் அதன் பின்னர் இருக்கும் இடம் பிரதிவாதிக்கு சொந்தமானது என்றும் பிரதிவாதிக்கு சொந்தமான இடத்தில் தான் நான் out door unit ஐ பொருத்தியுள்ளேன் என்றால் சரியல்ல.

வடக்கு புறமாக உள்ள வீட்டிற்கு 1/2 அடி உள்ளது. நான் 2 அடி அகலம் விட்டு தான் வீடு கட்டியுள்ளேன். sun shade மற்றும் AC out door unit சம்மந்மாக தான் எனக்கு பிரதிவாதிக்கும் பிரச்சனை என்றால் சரிதான். என் வீட்டிற்கு வடக்கு புறமாக 4அடி நீளம் கொண்ட காம்பௌண்ட்-ஐ கிழக்கு மேற்காக கட்டியுள்ளேன் என்றால் தெருவிற்கு முன்னர் தான் நான் காம்பௌண்ட் கட்டியுள்ளேன். என் வீட்டில் இருந்து மேற்கு புறமாக நான் மேற்படி காம்பௌண்ட்டை கட்டியுள்ளேன்.

4. நான் மேலே சொல்லியுள்ள என் வீட்டிற்கு வடக்கு புறமாக உள்ள 1/2 அடி மனை எனக்கு சொந்தமானது என்றால் சரியல்ல. அது வேறு ஒரு நபருக்கு சொந்தமானது. காலியாக உள்ள 3 அடி மனை எனக்கு தான் சொந்தம் என்றால் சரியல்ல. 1/2 அடி மனை வேறு ஒரு நபருக்கு சொந்தமானது. 3 அடி காலி மனையும் என் கட்டிடத்தின் அகலத்தையும் சேர்த்து கொண்டால் என் வீடு முடிகிறது என்றால் சரியல்ல. பிரதிவாதியின் நிலத்தை ஆகிரமித்து நான் sun shade மற்றும் out door unit ஐ வைத்துள்ளேன் என்றால் சரியல்ல. நான் பிரதிவாதியின் நிலத்தை ஆகிரமித்து விட்டு அவர் மீது தவறான வழக்கு தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல. நான் தவறான எண்ணத்தில் இவ்வழக்கை தாக்கல் செய்துள்ளதால் இவ்வழக்கு தள்ளுபடி செய்யப்பட வேண்டும் என்றால் சரியல்ல. **(குறுக்கு விசாரணை முடிவடைந்தது)**

Taken down and dictated by me to the typist in open Court. Read over/ interpreted to the witness. Understood and acknowledged by him/her to be correct.

K MUTHURAJ Digitally signed by K MUTHURAJ Date: 2026.06.01 17:34:01 +0530

Principal District Munsif,

Vellore.